# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

## மாகாண மட்ட ஆண்டிறுதிப் பொதுப் பரீட்சை உ 2013

## தமிழ்மொழியும் இலக்கியமும் - II

தரம் – 11 | நேரம் : 2.00 மணித்தியாலம்

சுட்டெண் : ................................ | புள்ளிகள்

---

♦ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக. இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**

**01. சுருக்கமான விடைதருக.**

i) பின்வருவருந் தொடரைப் பிரித்து எழுதுக.
□அஞ்சு மஞ்சுங்கயலஞ்சுமஞ் சுங்கடலஞ்சுமஞ்சும்.□

ii) பெயருடன் அல்லது வினையுடன் விகுதிசேர்த்து உருவாக்கப்படும் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்? உதாரணம் தருக.

iii) கலகம், கழகம் என்ற சொற்களை அவற்றின் பொருள் புலப்படுமாறு தனித்தனி வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

iv) கா எலாம் உயர்ந்த தாழை
கரையெலாம் கமழுந்தாழை
இங்கு ‘தாழை’ என்னும் சொல் உணர்த்தும் இரு பொருளும் எவை?

v) ‘காற்றில் விதிக்குரங்கு கிழித்தெறியும் பஞ்சுத் தலையணையா?’ இதில் வந்துள்ள அணியை விளக்குக.

vi) ‘இந்த மாற்றங்களைப் பல சமுதாயத்தில் நூல்கள் தோற்றுவித்தன.’ இந்த வாக்கியத்தைத் திருத்தமாக எழுதுக.

vii) கேலிச்சித்திரம் ஒன்றின் மிக அவசியமான பண்புகள் இரண்டினைத் தெரிவு செய்க.
இலகுவான கருத்து வெளிப்பாடு, பொதுவான விளிப்பு, கவர்ச்சிகரமான தலைப்பு, சிந்தனைத் தாக்கத்தை அதிகளவில் ஏற்படுத்தல்.

viii) துயரப்படும் மக்களை சுனாமி ........................................ விட்டுவைக்கவில்லை.
பொருத்தமான இணைப்பிடைச் சொல்லை வைத்து வாக்கியத்தை எழுதுக.

ix) விளம்பரம் செய்வதற்கான காரணங்கள் இரண்டு தருக.

x) நடையான், நாட்டான், கேட்டி என்பன எச்சமூகத்திற்குரிய கிளை மொழிகளாகும்?

(20புள்ளிகள்)

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடைஎழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

அ) மனிதனைப் படைத்த இறைவன், அவன் வாழ்வதற்கு உகந்த சூழலைப் படைத்தான். ஆனால் மனிதன் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இயற்கையைச் சூறையாடத் தொடங்கினான். இதனால் சீற்றமடைந்த இயற்கை; பேரழிவுகளை ஏற்படுத்தி மனிதனை அழிக்கத் தொடங்கியுள்ளது. இதன் விளைவாக நாளாந்தம் இயற்கை அனர்த்தங்களும், முரண்பாடான காலநிலை மாற்றங்களும் அதிகரித்து வருகின்றன. எனவே இயற்கை சமநிலையைப் பேணவேண்டும் என்பதை வலியுறுத்தி **விளக்கக் கட்டுரை** ஒன்றினை எழுதுக.

ஆ) நவீன விஞ்ஞான உலகில் தொலைத் தொடர்பு சாதனங்களின் வளர்ச்சியால் மாணவரது வாசிப்புப் பழக்கம் குறைவடைந்து செல்கின்றமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் அவர்களிடையே கிரகிக்கும் ஆற்றல், மொழித்திறன் என்பன குறைவடைந்து வருகின்றது. இக்கருத்துக்களை மையப்படுத்தி வாசிப்பின் பயன்பற்றி, வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவரிடையே நிகழ்த்தக் கூடியதாக **சொற்பொழிவு** ஒன்றை எழுதுக.

இ) இன்று சிறுவர் துஷ்பிரயோகம் அதிகரித்து வருவதை செய்தி ஊடகங்களினூடாக அறிய முடிகின்றது. சமூக நிறுவனங்கள் இந்நிலையை ஒழிக்க அயராது உழைக்கின்றன. இது பற்றி மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி இருவருக்கிடையேலான **உரையாடல்.**

ஈ) யாழ் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டத்தைப் பெற்றுக் கொள்ளும் முகமாகப் பூரணி தன் தாய், சகோதரர்கள், உறவினர்கள் புடைசூழ மினிபஸ்சில் சென்று கொண்டிருந்தாள். வாகனத்தில் இருந்தவர்கள் தமது மகிழ்ச்சியை பேச்சாலும், சிரிப்பாலும் வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் பூரணியின் நினைவுகள் பின்னோக்கி நகர்கின்றது. வறுமையின் மத்தியில் தனது இலட்சியத்தை அடைவதற்காக தான் அனுபவித்த கஷ்டங்கள் கண்முன்னே தோன்றியது........... என்ற கருவை மையமாகக் கொண்ட **சிறுகதை.**

(25புள்ளிகள்)

**03. கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக).**

இலட்சியங்களைக் கடைப்பிடித்தும் கற்பித்தும் வருவதால்தான் சமுதாயம் முன்னேறி மக்களுக்கு வேண்டிய இன்பத்தையும் சீர்திருத்தத்தையும் நல்குகின்றது. இலட்சியங்கள் இல்லாத சமுதாயம் பாழாய்ப் போகும் என்னும் உண்மையைப் பண்டைக் காலத் தமிழரும் நன்குணர்ந்தனர். இலட்சியம் இல்லாதவன் வெறும் யாக்கை என்பதை □பூட்கையில்லோன் யாக்கை போல□ என்னும் அடியில் புலவர் ஆலத்தூர்கிழார், புறநானூற்றில் நிலைநாட்டுகிறார்.

விரிவாகும் ஆளுமையை உருவாக்கும் நோக்கம் மக்கள் உள்ளத்தில் என்றும் இருந்தால், சமுதாயம் இன்பத்தை அளிக்கும் சமுதாயமாகக் காணப்படும். எவ்வளவிற்குப் பிறர் நலத்திற்காக மனிதன் பாடுபடுகின்றானோ அவ்வளவிற்கு அவன் ஆளுமை நன்கு வளரும். பிறருக்காகப் பணி செய்வதால் தான் ஒருவன் தன்னுடைய வாழ்க்கையைப் பண்புடைய வாழ்க்கையாக்குகின்றான். □என் கடன் பணி செய்து கிடப்பதே□ எனும் குறிக்கோள் வாழ்க்கையைத் தன்னலம் தேடும் துறையிலிருந்தெடுத்து ஆளுமையை நிறைவாக்கும் பண்பாக்குகின்றது. பிறர் நவ இயல் (Altuism) என்னும் பண்பு மக்கள் வரலாற்றில் படிப்படியாகத்தான் தோன்றும். நல்ல அறிவு வளர்ச்சி இல்லாத சமுதாயத்தில் சொந்த இனத்தவரோடுதான் மனிதன் உறவு கொண்டாடுவான். தன்னுடைய குடும்பத்தையும் தன்சிறு இனத்தையும் காப்பாற்றவே முயல்வான். படிப்படியாக அறிவு வளர மக்கள் அனைவரும் எங்கு வாழ்ந்தாலும் தன் இனத்தவர் என்றும் எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதல் வேண்டுமென்றும் சிந்தனை அவனுக்குத் தோன்றும்.

வெவ்வேறு பண்பாடுகள் வெவ்வேறு காலத்தில் பிறர்நல இயலை கற்பித்து வந்துள்ளன. சீன நாட்டில் கி.மு. 604ம் ஆண்டில் பிறந்த லாவேட்சேயும் அவருக்குப் பின்பு கொன்பூசியும் தம் காலத்திலேயே இந்தக் கொள்கையை ஒருவாறு கற்பித்து பிறர்பாலும் நமக்குப் பொறுப்புண்டு என்னும் உண்மையை வற்புறுத்தினர். ஆனால் கிரேக்க குடியினரை மட்டுமே தம்சிந்தனைக்குள் உட்படுத்தி, வேற்று நாட்டினரை பற்றி கவலை செலுத்தவில்லை. பிற நாட்டார் தம் இலட்சிய அரசைக் கொடுக்கா வண்ணம், தம் இலட்சிய அரசின் தலைநகரைக் கடலோரத்திலோ, துறைமுகத்திலோ அமைக்காது அந்நியர் செல்லாதவாறு பத்துக்கல் கடற்கரையிலிருந்து உள்நாட்டில் அமைக்க வேண்டுமென்று கூறினார்.

**04. பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

நெல்மூக்கு; கடுகுக்கண்; காற்றில் நீந்தும்
நிலவெனவே பஞ்சுடலம்; நெஞ்சம் தன்னில்
வெள்ளம் போல் புத்துணர்ச்சி; விம்மும் மூச்சில்
விடுதலையின் மென்கீதம்; விண்ணும் மண்ணும்
கொள்ளைகொள் தனிக்காதல் கொழுந்து உள்ளம்
கொத்தின்றிக் கூடுகட்டி வாழும் கொற்றம்
கள்வர்தம் பயமூட்டும் செல்வம் காணாக்
கலைஞானம் கண்டதடா, சின்னஞ்சிட்டு

1. இப்பாடலில் குறிப்பிடப்படுவது எது?
2. கவிஞர் அதன் தோற்றத்தை எவ்வாறு எடுத்துரைக்கிறார்?
3. வெள்ளம் போல் புத்துணர்ச்சி, விம்மும், மூச்சில் விடுதலையின் மென்கீதம் என்னும் தொடர்களின் பொருளைத் தருக.
4. கள்வருக்கு பயமில்லாச் செல்வம் எது?
5. இப்பாடலில் கையாளப்பட்ட இணைமொழியை எழுதுக.

05. தற்காலத்தில் இளைய சமூகத்தினரிடையே இடம்பெறுகின்ற கலாசார சீரழிவுகளை சுட்டிக்காட்டி, அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கோரி 100 சொற்களில் பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதுக.

அல்லது

உமது பாடசாலையில் டெங்கு ஒழிப்பு வாரத்தில் இடம்பெற்ற சிரமதானப் பணி தொடர்பான அறிக்கையினை சுகாதாரக் கழகச் செயலாளர் என்ற வகையில் 100 சொற்களில் தயாரிக்குக.